## ஹஜ்ரத் இத்ரீஸ் (அ)

ஹஜ்ரத் இத்ரீஸ் (அ) அவர்கள் அல்லாஹ்வின் மிகப் பிரியமான அடியானாக இருந்தார்கள். அல்லாஹ் திருக்ஃகுர்ஆனில் இரண்டு இடங்களில் மிகவும் சுருக்கமாக அவர்களைப்பற்றிக் கூறுயிருக்கின்றான். அல்லாஹ் தஆலா கூறுகி றான்:

وَإِسْمَٰعِيلَ وَإِدْرِيسَ وَذَا ٱلْكِفْلِ ۖ كُلٌّ مِّنَ ٱلصَّٰبِرِينَ ﴿٨٥﴾

பொருள்: மேலும், இதே அருட்பேற்றினை இஸ்மாயீலுக்கும் இத்ரீசுக்கும் துல்கிஃப்லுக்கும் நாம் வழங்கியிருந்தோம். இவர்கள் அனைவரும் பொறு மையைக் கடைபிடிப்பவர்களாக இருந்தார்கள். (அல் அன்பியா:85)

மற்றொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது:

وَٱذْكُرْ فِى ٱلْكِتَٰبِ إِدْرِيسَ ۚ إِنَّهُۥ كَانَ صِدِّيقًا نَّبِيًّا ﴿٥٦﴾ وَرَفَعْنَٰهُ مَكَانًا عَلِيًّا ﴿٥٧﴾

பொருள்: (நபியே) இத்ரீசைப்பற்றி இவ்வேதத்தில் உள்ளதைக் குறிப்படு வீராக, திண்ணமாக, அவர் ஒரு நேர்மையானவராகவும், நபியாகவும் இருந் தார். மேலும், நாம் அவரை உயர்ந்த இடத்திற்கு உயர்த்தினோம் (மர்யம்:56,57)

வரலாற்று நூல்களில் அவர்கள் எகிப்து நாட்டின் மன்ஃபீஃஸ் நகரத்தில் (மனஃப்) பிறந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. மக்கள் அவர்களை ஹுர் முசுல் ஹராமிசஹ் என்ற பட்டப்பெயரைக்கொண்டு அழைத்து வந்தார்கள். இந்த சீரியாக் மொழியிலான சொல்லின் பொருள் அனைத்து அனுபவமிக்க வர்களுள் மிகுந்த அனுபவமுடைய, சீரான சிந்தனையுடையவர் என்று பொருள். சில ஆராய்ச்சியாளர்கள் அவர்கள் பாபுல் நகரில் பிறந்தார்கள் என் றும் அவர்கள் நாடுபெயர்ந்து எகிப்திற்கு வந்தர்கள் என்றும் கூறுகின்றனர். ஹஜ்ரத் ஆதம் (அ) மற்றும் ஹஜ்ரத் ஷீத்ஸ் (அ) அவர்களுக்குப்பிறகு முதலில் இவர்களுக்குத்தான் நபித்துவம் வழங்கப்பட்டது. சில அறிஞர்கள் அவர்கள் ஹஜ்ரத் நூஹ் (அ) அவர்களுக்குப் பிறகு நபியாக ஆக்கப்பட்டார்கள் என்றும் கூறுகின்றனர். அவர்கள் துணி தைக்கும் தொழிலைச் செய்து வந்தார்கள் என் றும், தைக்கும்போது ஒவ்வொரு முறை ஊசி குத்தும்போதும் சுப்ஹானல் லாஹ் என்று கூறுவார்கள் என்றும் கூறப்படுகின்றது. இவ்வகையில், அவர்க ளுடைய காலத்தில் அவர்களைத்தவிர இறைவனைத் தியானிக்கக்கூடியவர்கள் யாரும் இருக்கவில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் இத்ரீஸ் (அ)

அவர்களைப்பற்றிய செய்தியினைக் கூறியதாக எந்த ஒரு ஸஹீஹான நபி மொழியும் அறிவிக்கப்படவில்லை. திருக்ஃகுர்ஆன் விரிவுரைகளில் காணப் படும் செய்திகள் அனைத்துமே இஸ்ராயீலிய வரலாறுகளிலிருந்து பெறப் பட்டவையாகும், அவர்களைப்பற்றி தல்மூத் எனப்படும் யூதர்களுடைய வர லாற்று நூலிலும் விரிவாகக் காணக்கிடைக்கின்றது. இவ்வகையில், பூமியில் தீமையான செயல்கள் பரவலாகச் செய்யப்பட்டுவந்த அக்காலக்கட்டத்தில், அனைத்தையும் துறந்து அல்லாஹ்வின் தியானத்தில் ஆழ்ந்திருந்த ஹஜ்ரத் இத்ரீஸ் (அ) அவர்களை அல்லாஹ் தஆலா தனிமையான இந்த வாழ்க்கை யினைவிட்டு மக்களிடையே சென்று அவர்களை வழிநடத்துங்கள் என்று கட் டளையிட்டான். அவர்களும் அவ்வாறே செய்தார்கள், அவர்கள் மக்களை நல்லுபதேசம் மற்றும் அறிவுரைகள் வழங்கி அல்லாஹ்வின் பாதையின் புறமாக அழைத்தார்கள். அவர்களுடைய இந்த ஆட்சி நீண்ட நாட்கள் வரை நிலைத்திருந்தது, இறுதியில், ஒரு சூறாவளியில் ஒரு நெருப்பு சூழ்ந்த ரதத்தில் அமர்ந்து வானத்தை நோக்கிச் சென்றுவிட்டார்கள். இவர்களைப்பற்றி தல்மூ தில் ஹனூக் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது, அல்லாஹ்வே உண் மையை அறிபவன். ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ர) அவர்கள் மற் றும் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஹஜ்ரத் இல்யாஸ் (அ) மற்றும் ஹஜ்ரத் இத்ரீஸ் (அ) இரண்டும் ஒரே மனித ருடைய பெயர்களாகும் (புக்ஹாரி). இறைத்தூதர் ﷺ அவர்கள் மிஃராஜ் பணயத்தின்போது அவர்களைச் சந்தித்துள்ளார்கள், அவர்களும் (அ) இறைத் தூதர் ﷺ அவர்களை நல்ல மனிதரான சகோதரரே, சிறப்புமிக்க நபியே வருக என்று வரவேற்றுள்ளார்கள். நபி சரிதை மற்றும் வரலாற்று ஆசிரியர் இப்னு இஸ்ஹாஃக் அவர்கள் ஹஜ்ரத் இத்ரீஸ் (அ) அவர்கள் முதன் முதலில் பேனாவைக்கொண்டு எழுதியவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள் (அல் ஹிதாயஹ் வந்நிஹாயஹ்: 1/92).

* * *